## தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இற்கு அமைய அறிக்கையிடல் திகதியின் பின்னரான நியாயமான காலப்பகுதியில் அவற்றை அக்கறையுள்ளோருக்கு வழங்காதிருப்பின், நிதிக்கூற்றுக்களின் பயன்பாட்டுத் தன்மை இழக்கப்படும் என்பதுடன் அறிக்கையிடல் திகதியின் பிந்திய 06 மாத காலத்தினுள் அந்த நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கான இயலுமை நிறுவனத்திற்குக் காணப்படுதல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அரசாங்க மூலதன மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்களை மானியக் கணக்கிலிருந்து திரண்ட நிதியத்திற்கு மாற்றுவது சபையின் கொள்கையாக இருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 7,295,549 செலவினம் மேற்குறிப்பிட்டவாறு திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலாக 2008 ஆம் ஆண்டின் ரூபா 6,900,000 மூலதன பெறுவனவு இரண்டு தடவைகள் பதியப்பட்டதாகக் கருதப்பட்டு அது திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான தவறு இடம்பெற்றிருக்கவில்லை என்பது கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இத் தவறினை திருத்துதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 11 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விடயங்களை அவற்றுடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 9,730,938 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1991 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை செலுத்தப்பட வேண்டிய ரூபா 701,110 கணக்காய்வுக் கட்டணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தக் காரர்களிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய ரூபா 87,550 ஆன வரித் தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 11 அனுபந்தம் மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு திருத்தமாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | ரூபா 217,748,020 கூட்டுத்தொகையான கிரயம் கொண்ட நிலையான சொத்துக் களும் ரூபா 2,301,165 கிரயம் கொண்ட இருப்புக்களும் தொடர்பில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சொத்து மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | கணனிகள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 11,579,955 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு முன்னைய நேரொத்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 14,129,348 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,549,393 ஆன பற்றாக்குறையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 7,780,514 ஆல் அதிகரித்த போதிலும், வருமானம் ரூபா 9,790,586 ஆல் அதிகரித்தமையே மேற்படி பற்றாக்குறை குறைவடைவதற்கு காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை அமைந்துள்ள காணியினை விடுவிப்பு மானியமாக ஒப்படைத்தல் 2015 யூலை 08 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் அது தொடர்பான கையளித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2016 ஏப்ரல் 30 வரையிலும் பொறுப்பளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் குறித் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூன்று ஆண்டுகள் தாமதிக்கப்பட்டு 2016 பெப்ரவரி 11 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் செலவினங்களிற்கிடையே 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) முற்பணங்கள் கட்டுப்பாடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்